## சுருக்கம்

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - போடிநாயக்கனூர், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி, குடியாத்தம், திருவத்திபுரம் ஆகிய ஐந்து நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் பேட்டூர் நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றிற்கு நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (2டி) எண். 67 நாள் 20 .07.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 4

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந. க. எண். 6829/ 2008/ JNN1, நாள் 19.2.2009 மற்றும் கடித எண்.41726/2008/JNN2 நாள். 29.04.2009.

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், போடிநாயக்கனூர், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி, குடியாத்தம், திருவத்திபுரம் மற்றும் பேட்டூர் ஆகிய ஆறு நகராட்சிகளுக்கான பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு அதற்கான விரிவான திட்ட அறிக்கை சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப் பெற்ற குழுவிற்கு 17.03.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது எனவும், அக்கூட்டத்தில் இத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு மைய அரசின் நிதி ஒதுக்கீட்டிற்காக 20.03.2008 அன்று அனுப்பி வைக்கப்பட்டு மேற்குறித்த நகராட்சிகளில் திட்டங்களை செயல்படுத்த வேண்டி மத்திய அரசு, மாநில அரசிற்கு முதல் தவணையை விடுவித்துள்ளது எனவும், திட்டங்களுக்கான நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டவுடன், இத்தொகை விடுவிக்கப்படும் என தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் கூறியுள்ளார்.

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பை அவற்றின் பொது நிதியிலிருந்து வழங்க உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புக்கொண்டு தீர்மானம் இயற்றியுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் மிகை ஒப்பந்தப் புள்ளி மற்றும் விலை விகிதங்களில் (Schedule of Rates) ஏற்படும் கூடுதல் செலவுகளை உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் சொந்த நிதியிலிருந்தோ அல்லது தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திலிருந்து கடன் பெறுவது மூலமோ மேற்கொள்வதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, போடிநாயக்கனூர், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி, குடியாத்தம், திருவத்திபுரம் ஆகிய ஐந்து நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான நிர்வாக அனுமதியும், பேட்டூர் நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு நிர்வாக அனுமதியும் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பின்வரும் நிதியாதாரங்கள் மற்றும் விபரங்களின் அடிப்படையில் போடிநாயக்கனூர், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி, குடியாத்தம், திருவத்திபுரம் ஆகிய ஐந்து நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும், பேட்டூர் நகராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான நிர்வாக அனுமதியை வழங்கி ஆணையிடுகிறது.

| வ எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (இலட்சங்களில்) | ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் பங்கு (இலட்சங்களில்) | | கடனை திருப்பிச் செலுத்தும் காலம் | உள்ளாட்சி அமைப்பின் பங்கு (10%) (இலட்சங்களில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் மதிப்பீட்டில் 30% | மானியம் 70% | | |
| 1. | போடிநாயக்கனூர் பாதாள சாக்கடைத் திட்டம் | 2628.81 | 709.78 | 1656.15 | 7 ஆண்டுகள் | 262.88 |
| 2. | அறந்தாங்கி பாதாள சாக்கடைத் திட்டம் | 2397.54 | 647.34 | 1510.45 | 7 ஆண்டுகள் | 239.75 |
| 3. | திருத்துறைப்பூண்டி பாதாள சாக்கடைத் திட்டம் | 1523.11 | 411.24 | 959.56 | 7 ஆண்டுகள் | 152.31 |
| 4. | குடியாத்தம் பாதாள சாக்கடைத் திட்டம் | 3123.61 | 843.38 | 1967.87 | 7 ஆண்டுகள் | 312.36 |
| 5. | திருவத்திபுரம் பாதாள சாக்கடைத் திட்டம் | 1815.36 | 490.15 | 1143.67 | 7 ஆண்டுகள் | 181.54 |
| 6. | மேட்டூர் நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டம் | 1247.19 | 336.74 | 785.73 | 7 ஆண்டுகள் | 124.72 |

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், சென்னை– 600 018.
சம்பந்தப்பட்ட நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018. (பெயர் உறையில்)
உள்நுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காயத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
<u>நகல்:</u> மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (வரவு செலவு / அநமு.II / நநி.2) துறை, சென்னை– 600 009.
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, சென்னை– 600 009.
இ.கோ./உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/7/05
பிரிவு அலுவலர்.